**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**எம்.சி.ஓ.பி.எண்478 /2016**
**நாள் 11/02/2026 புதன்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டில் 54–வது பிரிவின் ஏற்ப்பாட்டின் படி சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – தாமோதரன் | த/பெயர் – மாரிபிள்ளை |
| வயது – | தொழில் – |
| விலாசம் – | |

முதல் விசாரணை–

நான் இந்த வழக்கின் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாவேன். இவ்வழக்கு குறித்த விவரங்கள் அனைத்தும் பிரமான வாக்குமூலத்தின் வாயிலாக கூறியுள்ளேன். ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–

1. என்னுடைய கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்று காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை தாக்கல்செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. விபத்து சம்மந்தமாக நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய அஜாக்கிரதையால் தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்றும் அதனால் என்னுடைய போக்குவரத்து கழகம் தான் நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**